RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22135

OPEN ACCESS

# தொல்காப்பிய அகத்திணைக் கூறுகளின் அடிப்படையில் குறுந்தொகை களவியல் பாடல்கள்

அ. ஆன்சி [அ, *], எஸ். அலக்ஸ் ஜேக்கப் [ஆ]

[அ] தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 627012) தொலையாவட்டம்-629157, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 627012) மார்த்தாண்டம்-629165, தமிழ்நாடு, இந்தியா

# Kurunthogai Kalviyal Songs based on Tholkappiya Agathinai Elements

A. Ancy [a, *], S. Alex Jacob [b]

[a] Department of Tamil, Annai Velankanni College, (Manonmaniam Sundaranar University, Tirunelveli-627012), Tholayavattam-629157, India

[b] Department of Tamil, Nesamony Menmorial Christian College, (Manonmaniam Sundaranar University, Tirunelveli-627012), Marthandam-629165, India

* Corresponding Author: ancyantoantin@gmail.com

Received: 28-11-2021
Revised: 09-01-2022
Accepted: 17-01-2022
Published: 30-01-2022

Check for updates

**ABSTRACT**

Tholkappiyam is one of the greatest grammar books from ancient times to the present day. Tholkappiyar was the author of Tholkappiyam. The Tolkappiyam describes the five types of grammar in great detail. The third of these is Porulathikaram. It is designed to reflect the inner and outer lives of the people. Porulathikaram is something that cannot be found in any other languages and literature, and is the literature of life. The section on theft and chastity best describes the inner life of the Hero and the Heroine. In the Sangam literary work, the Kurunthogai songs, there are plenty of elements of the Agattinai of Tholkappiyar.

**Keywords:** Kurunthogai, Tholkappiyam, Tholkappiyar, Literature

## முன்னுரை

பண்டையத் தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கையை அகம், புறம் என்று இரண்டாகப் பிரித்தனர். தலைவனும், தலைவியும் அன்பினால் கலந்து நிகழ்த்தும் இல்லற வாழ்வு அகம் எனப்படும். புறம் என்பது சமூகம் சார்ந்த வாழ்வியலையும் சிறப்பாக போர்க்கடமைகளை குறிக்கிறது. அகத்திணை களவு, கற்பு என இருவகைப்படும். திருமணத்திற்கு முற்பட்ட ஒழுக்கம் களவு என்றும், கற்பு என்பது தலைவன் தலைவியின் திருமணத்திற்கு பின் நிகழும் இல்லற வாழ்வையும் குறிக்கிறது. தொல்காப்பியர் தம் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் களவு கற்பு குறித்து மிக அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் கூறும் அகத்திணைக் கூறுகளில் மிகுந்த சிறப்பு மிக்கவை களவியல் பாடல்கள். இப்பாடல்களில் காணப்படும் தொல்காப்பிய அகத்திணைக் கூறுகள் குறித்து இங்கு ஆராயப்படுகிறது.

## குறுந்தொகை

சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படுபவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகும். எட்டுத்தொகை நூல்களுள் அகம் சார்ந்த நூல்களுள் ஒன்று குறுந்தொகை. இந்நூல் ‘நல்ல’ என்னும்

அடைமொழி பெற்று விளங்குகிறது. இது 401 பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ. ளரையாசிரியர்கள் பலரால் மேற்கோள் காட்டப்பட்ட சிறப்பிற்குரியது குறுந்தொகை.

## களவு

களவு எனப்படுவது திருமணத்திற்கு முன் ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தாமே ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் ஒழுக்கம் ஆகும். பெற்றோருக்குத் தெரியாமல் மறைவாக சந்தித்துக் கொள்வதால் இது களவெனப்பட்டது.

களவு என்பதற்குத் "திருட்டு, திருடிய பொருள், கள்ளம், பிறர் பொருளை மறைவாகக் கவருதல் என்றும் களவுப் புணர்ச்சி என்பதற்குத் தலைவனும் தலைவியும் பிறர் அறியாது தனியிடத்தில் எதிர்பட்டுக் கூடுகை"[1] என்றும் கழகத் தமிழ் அகராதி பொருள் உரைக்கின்றது. களவு என்பதற்கு பல பொருள் இருப்பினும் அது மறைவாக சந்தித்தல் என்ற பொருளையே குறிக்கிறது. களவியலானது காட்சி, ஐயம், மெலிதல், பகற்குறி, பிரிவுநிலை போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்டுள்ளது.

## வேட்கை

தலைவியை தான் விரும்பி அடைய வேண்டும் என்று தலைவனும், தலைவனை சேர வேண்டும் என்று தலைவிக்கும் தோன்றும் மனநிலை வேட்கை ஆகும். இதனைத் தொல்காப்பியர்,

"வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்றிச்
சிறப்படைய மரபின்அவை களவென மொழிப"

என்ற நூற்பாவில் சுட்டியுள்ளார் (Ilampooranar, 2018). இதில் வேட்கை முதல் மயக்கம் வரை தலைவனுக்கும் தலைவிக்கும் உரிய மெய்ப்பாடுகள். இவை களவு நிகழ துணையாக அமைபவை.

குறுந்தொகை பாலில் தலைவனின் வேட்கை குறித்து சுட்டப்பட்டுள்ளது.

"கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறு இதழ்க் குவளையொடு இடையிடுபு விரைஇ
ஐது தொடை மாண்ட கோதை போய
நறிய நல்வோள் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே"

அழகிய தலைவி ஒருத்தியும், தலைவனும் காதல் கொண்டனர். இருவரும் எதிர்பாராத நிலையில் கூடி இன்பமாக இருக்கின்றனர். மறுநாள் தலைவியை மீண்டும் சந்திக்க வேண்டும் என்னும் வேட்கை தலைவனுக்குத் தோன்றுகிறது. இத்தகைய தலைவனின் வேட்கையினை மேற்காண் பாடலடிகள் வழி உணரமுடிகிறது (Nagarajan, 2017).

## மெலிதல்

தலைவனை நினைத்து வருந்திய தலைவி உணவு உண்ணாமையால் உடல் மெலிவுற்றுக் காணப்படுகிறாள் என்பதை தொல்காப்பியர்,

"வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்"

என்ற நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார் (Ganesaiyar, 2010). உடலில் பசலை தோன்றுவதால் இயற்கை நிறம் மாறுதல், கைவளையல்கள் கழன்று வீழ்தல் போன்றவை உடலில் தோன்றும் மாறுபாடுகளாகும்.

“மாசு அறக் கழீஇய யானை போலப்

பெரும் பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்

பைதல் ஒருதலைச் சேர்க்கும் நாடன்

நோய் தந்தனனே - தோழி

மாலை ஆர்ந்த நம் குவளைஅம் கண்ணே”

இப்பாடலில் தலைவன் தலைவியை விட்டு பிரிந்து சென்ற போது தலைவி, தலைவன் தனக்கு துன்பம் ஏற்படும்படி காமநோயை தந்துவிட்டு சென்றதால் குவளை மலர் போன்ற தலைவியின் அழகிய கண்கள் பசலையை கொண்டுள்ளன என்பதை இப்பாடல் குறிப்பிடுகிறது (Nagarajan, 2017). மேலும்,

“இன்னாள் ஆயினன் நன்னுதல் என்று, அவர்த்

துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே

நன்றுமன் வாழி - தோழி நம்படப்பை

நீர்வார் பைம்புதல் கலித்த

மாரிப் பீரத்து அலர்சில கொண்டே”

எனும் பாடலில் தலைவனைப்பிரிந்த தலைவிக்கு பசலை நோய் ஏற்படுகிறது. தலைவியின் வீட்டுத் தோட்டத்தில் மழை வடிகின்ற இடத்திலுள்ள பீர்க்கங் கொடியின் நிறத்தை ஒத்தது தலைவியின் உடலில் தோன்றியுள்ள பசலை. இதனால் தலைவி மெலிந்து காணப்படுகிறாள் என்பதை இப்பாடலின் வழி அறியமுடிகிறது (Nagarajan, 2017).

## ஆக்கம் செப்பல்

தலைவனின் பிரிவினால் தலைவிக்கு தூக்கமின்மை, உடல் வருத்தம் போன்றவை ஏற்படும். இத்தகைய தன் நிலைமையினை பிறருக்குக் கூறுதலே ஆக்கம் செப்பல் என்று தொல்காப்பியர் தம் நூற்பாவில் லரையறுத்துள்ளார். குறுந்தொகைப் பாடலிலும் தலைவி தூக்கமின்றித் தவித்த நிலையைக் காண முடிகிறது. இதனை,

“நளென்றன்றே யாமம் சொல் அவிந்து

இனிது அடங்கினரே மாக்கள் முடிவு இன்று

நனந்தலை உலகமும் துஞ்சும்

ஓர் யான் மன்ற துஞ்சாதேனே”

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன (Nagarajan, 2017). பகற்பொழுது நிறைவடைந்து இரவுப்பொழுது தோன்றியது. மக்கள் அனைவரும் பேச்சைத் தவிர்த்து இனிமையாகத் தூங்கினர். ஆனால் தலைவி ஒருத்தியே தூக்கமின்மையால் தலைவனை நினைத்து கலங்கிக் கொண்டிருந்தாள். இத்தகைய தன் நிலையினை தலைவி தோழியிடம் கூறி வருந்துவதை மேற்காண் பாடலடிகளின் வழி அறியலாம்.

தலைவனின் பிரிவையும் அவனது வழியின் அருமையையும் நினைத்து வருந்தி தோழியிடம் சொல்லும் தலைவியைப் பற்றியும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

“எறும்பி அளையின் குறும்பல் சுனைய

உலைக்கல் அன்ன பாறை ஏறி

கொடுவில் எயினர், பகழி மாய்க்கும்

கவலைத்து என்ப, அவர்தேர் சென்ற ஆறே

அதுமற்று அவலம் கொள்ளாது,

தொதுமல கழறும் இவ் அழிங்கல் ஊரே"[8]

என்னும் பாடலில் தலைவியைப் பிரிந்து தலைவன் பாலைநிலத்தின் வழியே சென்றார் (Nagarajan, 2017). அவர் செல்லும் பாலைநிலம் கொடுமையானது என்பதை அறிந்த தலைவி தலைவனின் துன்பத்தை எண்ணி வருந்துகிறாள். தலைவனின் பிரிவுத்துயர் தன்னை வருத்தினாலும் அதை விட தலைவன் பாலைநிலத்தில் மேற்கொள்ளும் பயணமே தலைவியை பெரிதும் வாட்டுகிறது என்பதைத் தன் தோழியிடமும் அவள் எடுத்துரைப்பதை இப்பாடலடிகள் வழி அறிய முடிகிறது.

## முடிவுரை

களவு வாழ்க்கையில் காட்சி, ஐயம், மெலிதல், பகற்குறி, பிரிவுநிலை, ஆக்கம் செப்பல் போன்ற பல்வேறு கூறுகள் காணப்படுகின்றன. சங்ககாலம் முதல் தற்காலம் வரை களவு எனப்படும் காதல் வாழ்க்கை தொடர்ந்து வருகிறது. களவு காலத்தில் நிகழும் பல்வேறு நிகழ்வுகளை இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவற்றிற்கு மேலாக விளங்குவது தொல்காப்பியம். தொல்காப்பியர் கூறும் களவியல் கூறுகள் குறுந்தொகை பாடல்களில் மிகுதியாக காணப்படுகின்றன என்பதை மேற்காண் சான்றுகளின் வழி உறுதி செய்ய முடிகிறது.

## References

Ganesaiyar, (2010) Tholkappiyam Urai, International Institute of Tamil Studies, Chennai, India.

Ilampooranar, (2018) Tholkappiyam Poorulathikaram, Saratha Publication, Chennai, India

Nagarajan, (2017) Kurunthogai Mulamum Uraiyum, Sixth Edition, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License